**களுத்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 08 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர நிதிக்கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்காக 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 505,373 தொகையான (செலவினம்) முற்கொடுப்பனவிற்கான சீராக்கம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்த கடை வாடகைத் தொகையான ரூபா 28,600 தொகையும் வீத வரித் தொகையான ரூபா 753,227 தொகையும் முற் பெறுவனவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 108,537 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் உரித்தான ரூபா 352,348 கூட்டுத்தொகையான செலவினத்திற்காக மீளாய்வாண்டின் போது கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) நூலகப் புத்தகங்கள், மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள், இயந்திரங்கள மற்றும் உபகரணங்களின்

கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 1994 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் ரூபா 6,526,163 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் உரிய பட்டோலைகள் இன்மையின் காரணமாக ரூபா 261,720,638 கூட்டுத்தொகையான 05 சொத்து மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,778,582 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,278,832 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு பற்றாக்குறைகள் /குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்கு உரித்தான செலவினத் தொகையான ரூபா 2,740,213 கடன்கொடுத்தோராக முன்னைய ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிராத காரணத்தால் அச் செலவினம் 2014 ஆம் ஆண்டின் போது திரண்ம நிதியத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டிற்கு முன்னைய கால எல்லைக்கு உரித்தான ரூபா 9,067,532 மற்றும் ரூபா 11,703,593 கூட்டுத்தொகையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மீதி தீர்க்கப்படுவதற்கு அல்லது அறவிடப்படுவதற்கு முடியாததெனக் குறிப்பிடப்பட்டு சபையின் அங்கீகாரம் இல்லாது கணக்குகளில் இருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் பொது நிதிக் கணக்கிற்கு (977) உரித்தாக விநியோகிக்கப்பட்டு எனினும் கணக்காய்வுத் தினமாகிய 2015 யூன் 05 ஆம் திகதி வரையிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 54,735 தொகையான 06 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் நிதிப் பிரமாணம் 396 (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இறந்த மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்ற 75 உத்தியோகத்தர்களால் பெறப்பட்டு எனினும் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 369,920 ஆகக் காணப்பட்டது.

(உ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்பட்டோர்∴ கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய கடன்கொடுத்தோரில் 56 சதவீதமான அதாவது ரூபா 20,619,409 தொகை 05 ஆண்டுகளுக்கும் மேல் பழைமை

வாய்ந்த மீதியானதுடன் கடன்பட்டோரில் 39 சதவீதமான அதாவது ரூபா 16,259,744 தொகை 01 வருடத்திலும் பார்க்க பழைமை வாய்ந்தவையாகும்.

(ஊ) மகநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 2 வீதிச் செயற்திட்டங்களுக்காக மீளளிக்கப்பட வேண்டிய ரூபா 810,383 தொகையான செலவினம் உரிய முகவர் நிறுவகத்தால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அவை மீளச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 யூலை 06 ஆம் திகதி வரையிலும் உரிய பணம் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வீதவரியும் வரியும் | 28,032 | 16,179 | 28,637 |
| (ii) | வாடகை | 9,436 | 6,521 | 4,197 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 235 | 213 | 34 |
| (iv) | ஏனைய வருமானம் | 122,707 | 122,707 | -- |

### 2.3.2 வீதவரி

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒட்டுமொத்த வீதவரி நிலுவையின் மீதி ரூபா 27,614.261 ஆகக் காணப்பட்டது. இதில் 01 வருடத்திற்குக் கூடுதலான காலத்திற்கு உரித்தான ரூபா 16,292,507 தொகையான நிலுவை மீதி 6751 வீதவரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம், கைத்தொழில் வரி, வியாபார வரி

2014 ஆம் ஆண்டிற்குரித்தான 38 வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 37,500 தொகையான வியாபார அனுமதிப்பத்திர மீதியும், 15 வியாபாரங்களிலிருந்து ரூபா 15,975 தொகையான கைத்தொழில் வரி மீதியும், 239 வியாபாரங்களிலிருந்து வியாபார வரியான ரூபா 460,920 தொகையும் 2015 மே 15 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டன.

### 2.3.4 மதுபானசாலை வாடகை

2015 பெப்ரவரி 12 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிராத மதுபானசாலை வாடகை வருமானம் ரூபா 750,719 ஆகக் காணப்பட்டது.

**2.3.5 விளம்பரப் பலகை வருமானம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 238,430 தொகையான விளம்பரப் பலகைக் கட்டணம் 2015 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 கடை வாடகை**

(அ) சபையிடம் உள்ள 36 கடைகளில் ரூபா 1,192,582 தொகையான நிலுவையான வாடகை மீதி 2015 ஏப்ரல் 20 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) மேற்குறித்த கடைகளின் மாதாந்த வாடகையைக் கருத்திற்கொள்கையில் நிலுவையான வாடகை ஏறத்தாழ 03 மாதங்கள் முதல் 4 ஆண்டுகளும் 10 மாத கால வீச்சிற்கு உரித்தானதாகக் காணப்பட்டது.

(இ) கடை வாடகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் கடை வாடகை, 1993 உடன்படிக்கைகளின் பின்னர் கைச்சாத்திடப்பட்டிராததுடன் கோவைகளும் 1993 இன் பின் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**முன்பள்ளி மாணவர்களிடம் இருந்து பணம் அறவிடப்படல்**

சபையின் முன்பள்ளிக்கு மாணவர்களைச் சேர்க்கையில் சபை எவ்வித அங்கீகாரமும் இன்றி ஒரு பிள்ளையிடம் ரூபா 600 படி 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 45,000 தொகையை அறவிட்டிருந்தது. இப் பண அறவீடு பல வருட காலத்திற்கு முன்பிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இப் பணம் எந்த வங்கிக் கணக்கிலும் வைப்புச் செய்யப்பட்டிராததுடன் முன்பள்ளிச் சிறுவர் ஒருவரின் தாயின் பொறுப்பில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) இவ்வகையில் அறவிடப்பட்ட பணம், ஆண்டின் இறுதியில் நடாத்தப்படும் முன்பள்ளி பல்சுவை அம்சத்தின் உணவுச் செலவினத்திற்காகவும் ஏனைய சிறு செலவினங்களுக்காக ஏற்கப்படுவதாகவும் கண்டறியப்பட்ட போதிலும் அச் செலவினம் தொடர்பாக எவ்வித சான்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. குணக்காய்வுப் பரிசோதனையில் இருந்து 2 ½ வார காலத்தின் பின்னர் 2013 திசெம்பர் 12 ஆம் திகதி சபையின் முன்பள்ளிக் காப்பாளரும் பணம் வைத்துக்கொண்டிருந்த தாயாராலும் ரூபா 36,601 தொகையான பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்கு சபையின் 11 கைத்தொழில்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி வரையிலும் 3 கைத்தொழில்களில் மாத்திரமே வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இம் 3 கைத்தொழில்களும், 2014 ஆகஸ்ட் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் பூர்த்தியடைந்திருந்த போதிலும், 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி வரையிலும் வேலை நிறைவேற்றப்பட்டமைக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 03 ஆம் திகதி கிராமத்தில் இருந்து கிராமத்திற்கு எனும் செயற்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 2,950,000 தொகையான 3 செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்டிருந்த ரூபா 7,195,000 தொகையான 13 செயற்திட்டங்களில், 7 செயற்திட்டங்கள் மாத்திரம் 2014 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தன. 6 செயற்திட்டங்களின் வேலைகள் 2015 பெப்ரவரி வரையில் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

(உ) இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களில் 3 செயற்திட்டங்கள் வீதி மேற்பரப்பு தயாரிக்கப்பட்டு ABC கற்கள் பதிக்கப்பட்டிருந்தன.

(ஊ) அம் 3 வீதிகளிற்கும் வேறு இரு வீதிகளிற்குமாக விநியோகிக்கப்பட்டிருந்த வடிவமைப்புக் கற்கள் வீதி ஓரங்களில் அடுக்கிவிடப்பட்டிருந்தன. இக் கற்கள் 8 மாதங்களுக்கு முன்னர் வீதிக்கு விநியோகிக்கப்பட்டதாக பிரதேச மக்களால் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ) 2015 சனவரி 20 ஆம் திகதிய MPS/HYW/MNG/7/GEN/2015 ஆம் இலக்க நெடுந்தெருக்கள் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளரின் கடிதத்தின் மூலம் 2014 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த வேலை நிறைவேற்றப்பட்டிராத செயற்திட்டங்களின் வேலை முடிவுறுத்தப்பட்டு உரிய பட்டியல்கள் 2015 பெப்ரவரி 13 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதன் படியோ அல்லது மேற்குறித்த வீதிகளின் வேலை பூர்த்தி செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாடு செயற்திறமையீனங்கள்**

2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ.⁚.2002.⁚.02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தொடர்புபடுத்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**3.4 வாகனக் கட்டுப்பாடு**

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 1647 (ஆ) இன் படி, சபையிடம் உள்ள வாகனங்களும் அவற்றின் உதிரிப்பாகங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டின் பின்னர் அத்தகைய மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை லொறியின் இயந்திரம் ரூபா 479,080 தொகை செலவில் திருத்தப்பட்டு 2015 சனவரி 21 ஆம் திகதி சபைக்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மீள 2015 சனவரி 23 ஆம் திகதி வரை கியர் முறைமை திருத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளதாக சாரதி குறிப்பிட்டிருந்தார். மேலும் இயந்திரம் திருத்தப்படுவதற்காக 75 சதவீதம் அதாவது ரூபா 359,310 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2013 நவம்பர் 20 ஆம் திகதி முதல் செயலிழந்திருந்த சபையின் தீயணைப்புப் பிரிவிற்கு உரித்தான வொல்வோ வாகனம் 2015 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் போது சபையிடம் காணப்பட்ட வாகனத்தைத் திருத்துவதற்காக ரூபா 2,610,532 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அத் திருத்த வேலைகள் எதுவும் சம்பவக் குறிப்புப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) சபையிடம் உள்ள வாகனங்களில் மைலோ மீற்றர் நீண்ட காலமாகச் செயலிழந்த நிலையில் இருந்தமை கண்டறியப்பட்டது.

(ஊ) 2014 ஆம் ஆண்டின் போது சபையிடம் காணப்பட்ட சகல வாகனங்களுக்காகவும் 64986 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 7,869,805 தொகை செலவிடப்பட்டிருந்தது. மைலோ மீற்றர் செயலிழந்த நிலையில் இருக்கையில் எரிபொருள் விநியோகம் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பதுவும் போக்குவரத்திற்காகக் காண்பிக்கப்பட்டுள்ள தூரத்தின் துல்லியத் தன்மை குறித்து சிக்கல் நிலை எழுந்துள்ளது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீடிடல்
(ஈ) செலவினக் கட்டுப்பாடு
(உ) சொத்து முகாமைத்துவம்
(ஊ) மனித வள முகாமைத்துவம்
(எ) வாகனக் கட்டுப்பாடு
(ஏ) செயற்திட்ட நிர்வாகம்